**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 07 ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

O.S. NO. 44/2023

**வா.சா.1**

**திரு. கார்த்திகேயன்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை ( 2 ம் பிரதிவாதி தரப்பில்)**

என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கும், என் தம்பி 1 ம் பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்ட பூமியை அவர் அவருக்குள்ள பங்குக்கும் அதிகமாக என் பங்கையும் சேர்த்து விற்பனை செய்துவிட்டதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சொத்தானது குஞ்சாயாள் எழுதிவைத்த உயில் சாசனத்தின்படி எனக்கும், என் தம்பிக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனக்கு வடபுறம் பாத்தியப்பட்டது. தென்புற பகுதி என் தம்பிக்கு பாத்தியப்பட்டது. குஞ்சாயாள் எழுதிவைத்த உயில் சாசனத்தில் கண்டுள்ள சொத்தின் சர்வே எண் என்னவென்றால் 168/1. மேற்படி 168/1 சொத்து முழுவதும் உயிலில் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால்சரிதான். அதன்படி பாதி எனக்கும், அடுத்த பாதி 1ம் பிரதிவாதிக்கும் என்றால் சரிதான். சொத்தின் மொத்த விஸ்தீரணம் என்று அளந்து பார்த்தோமா என்றால் இல்லை. அளந்துபார்த்தால் தான் கூடுதலாக உள்ளதா, அல்லது குறைவாக உள்ளதா என்று தெரிந்துகொள்ள இயலும் என்றால் சரிதான்.

என் தம்பி ஒரு பகுதி சொத்தை 2013 ல் 2 ம் பிரதிவாதி சுமித்ரா என்பவருக்கு கிரையம் செய்துகொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் 3050 சதுரடிகள் என்று கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் நினைவில்லை. 2014 ம் ஆண்டு 1, 2 பிரதிவாதிகள் பிழைத் திருத்தல் பத்திரம் பதிவு செய்துகொண்டார்கள் என்றால் நினைவில்லை. மேற்படி பிழை திருத்தல் பத்திரத்தில் 2801 1/4 சதுரடிகள் என்று திருத்தப்பட்டுள்ளது என்றால் நினைவில்லை. உயில் சாசனத்தின்படி மொத்த விஸ்தீரணம் 10458 சதுரடிகள் என்றும், அதில் 5229 சதுரடிகள் எனக்கும், 5229 சதுரடிகள் என் தம்பிக்கும் பாத்தியம் என்று வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு தான் நாங்கள் இருவரும் அனுபவித்து வந்தோமா என்றால் பொதுவில்தான் அனுபவித்து வந்தோம். கடைகளை பொதுவில் அனுபவித்தோமா அல்லது தனியாக அனுபவித்தாரா என்றால் என் அப்பா தான் அனுபவித்து வந்தார். 2-ம் பிரதிவாதிக்கு 2801 சதுரடிகள் தான் கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். 2 ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்துகொடுத்த பின்னிட்டும் 1 ம் பிரதிவாதிக்கு தாவாசொத்தில் இன்னும் சொத்து இருந்தது என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதிக்கு உயிலில் கண்டுள்ள பாதி பாகத்திற்கும் அதிகமாக 1 ம் பிரதிவாதி எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கானது எனது சொத்துக்கும், 1, 2 பிரதிவாதிகளுக்கும் இடையே அத்து நிர்ணயம் செய்ய பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு அளவீடு செய்தால் சொத்தின் அளவுகள் தெரிந்துவிடும் என்றால் சரிதான். நான் இதுவரை சொத்தை அளவீடுசெய்ய முயற்சி மேற்கொள்ளவில்லை, அது சம்பந்தமாக அரசுக்கு கட்டணமும் செலுத்தவில்லை என்றால் சரிதான்.

நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை அளந்து அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்ய ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். உயில்படி தாவா சொத்தில் 1ம் பிரதிவாதிக்கு தற்போது மீதி சொத்து எதுவுமில்லை என்றால் சரிதான். சொத்துக்களை அளவீடு செய்தால் பாதி சொத்து எனக்கும், மீதி சொத்து 2, 3 பிரதிவாதிகளுக்கு தான் சேரும் என்றால் சரிதான்.

**வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**